தினமணி

**கேள்விக்குறியாகும் தென்னை விவசாயிகள் வாழ்க்கை**

*சீ. சிவா*

First Published : 25 Apr 2012 01:33:49 AM IST



புயலால் விழுந்த தென்னை மரங்கள். இடம்: தாழங்குடா. (கோப்புப்படம்).

கடலூர்: கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் புயல் தாக்குதலால் தென்னை விவசாயம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், 3 மாதங்களாகியும் புயல் நிவாரண நிதி வழங்காததால் தென்னை விவசாயிகள் மற்றும் அதைச்சார்ந்த தொழிலாளர்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகியுள்ளது. எனவே, தமிழக அரசு புயல் நிவாரண நிதியை உடனடியாக வழங்கவேண்டும் என தென்னை விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் வீசிய புயல் கடலூர், விழுப்புரம் மாவட்டங்களை உருக்குலைந்ததோடு மட்டுமல்லாமல், முந்திரி, மா, பலா, தென்னை உள்ளிட்ட விவசாயத்தை முற்றிலும் அழித்தது. புயலின் கோர தாண்டவத்தால், பண்ருட்டி வட்டாரப் பகுதிகளில் இருந்த லட்சக்கணக்கான முந்திரி, பலா மரங்கள் வேரோடு சாய்ந்தன. இதேபோல், கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் 4508 ஹெக்டேர் பரப்பளவில் இருந்த தென்னை விவசாயம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு இதுவரை புயல் நிவாரணம் வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

இதுகுறித்து கடலூர் தென்னை விவசாயிகள் சங்கத் தலைவர் பி.ராமலிங்கம் தெரிவித்தது: புயலின் தாக்குதலால் கடலூர் மாவட்டத்தில் 2513 ஹெக்டேர் பரப்பளவில் தென்னை மரங்கள் இருந்தன.

புயலின்போது 1299 ஹெக்டேர் பரப்பளவில் இருந்த தென்னை மரங்கள் வேரோடு விழுந்தன. இதேபோல், விழுப்புரம் மாவட்டத்தில் 1995 ஹெக்டேர் பரப்பளவில் தென்னை மரங்கள் இருந்தன. புயலின்போது 506 ஹெக்டேர் பரப்பளவில் இருந்த தென்னமரங்கள் வேரோடு முறிந்து விழுந்தன. இதனால், கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 5745 தென்னை விவசாயிகளும், விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த 1338 விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், விழுந்த மரங்களை அப்புறப்படுத்துவதற்கு 1 மரத்துக்கு 500 ரூபாய் வீதமும், ஒரு ஹெக்டேருக்கு தென்னை கன்றுகளை பராமரிப்பதற்கு 73 ஆயிரம் வழங்குவதாக அரசு அறிவித்தது. இதன்படி, 15 கோடியே 79 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய் ஒத்துக்கப்படவுள்ளதாகக் கூறினர். ஆனால், இதுவரை பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு எந்தவித நிவாரணமும் வழங்கப்படவில்லை. இதனால், தென்னை விவசாயத்தில் ஈடுபட்டுள்ள ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட தென்னை விவசாயிகளின் வாழ்க்கை பாதிக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், தென்னை சார்ந்த தொழிலான இளநீர், தேங்காய் விற்பவர்கள், கயிறு, கோழிப்பண்ணைக்கு பயன்படுத்தப்படும் மட்டைசோறு எனும் பித்து விற்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளோர், கீற்று தொழில், கொட்டாங்குச்சி மூலம் பிஸ்கட், பத்தி, கரித்தூள் தயாரித்தல், பாலை, வீட்டுவாரை விற்பனை, துடைப்பம் விற்பனை உள்ளிட்ட தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 50 ஆயிரம் தொழிலாளர்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகியுள்ளது.

முந்திரி,மா, பலா விவசாயம் போல ஆண்டுக்கு ஒரு முறை விளைவது போன்ற விவசாயம் அல்ல தென்னை. 40 முதல் 45 நாள்களுக்கு ஒருமுறை தேங்காய் அறுவடை செய்யப்படுகிறது. கடலூர் மாவட்டத்தில் மட்டும் ஒர் அறுவடையின்போது, சுமார் 1 கோடியே 80 லட்சம் இளநீர், தேங்காய் அறுவடை செய்யப்படுகிறது. இதனால் ஹெக்டேர் ஒன்றுக்கு 7 ஆயிரம் ரூபாய் வருமானம் இருந்தது. இந்த வருவாயின் மூலம் குழந்தைகளின் படிப்பு செலவு, குடும்ப செலவு உள்ளிட்ட இதர செலவுகளை சுமையில்லாமல் செய்துவந்தோம். இந்நிலையில் புயலின் கோர தாண்டவத்தால் தென்னை மரங்கள் மட்டுமல்ல எங்கள் வாழ்க்கை முறையும் பாதிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் நிவாரண உதவியை வழங்குவதற்கு தாமதப்படுத்தினாலும், நாங்கள் கொப்பரை தேங்காய், தேங்காய் எண்ணெய் உள்ளிட்டவைகளுக்காக ஆண்டுதோறும் செலுத்தும் 30 கோடி ரூபாய் வரியிலிருந்து உதவித்தொகை வழங்கினாலே போதுமானதாக இருக்கும்.

இந்நிலையில் நிவாரணத் தொகைக்காக மாவட்ட நிர்வாகத்திடம் பலமுறை மனு கொடுத்தும் எந்த நடவடிக்கையும் இல்லை. தென்னை விவசாயிகள் மற்றும் தொழிலாளிகளைப் பாதுகாக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால், தென்னை விவசாயிகளின் வாழ்கைமுறை மாறிவிடும் என்றார்.

எனவே தென்னை விவசாயிகளையும், அதைச் சார்ந்துள்ள தொழிலாளர்களையும் காக்க தமிழக அரசு உடனடியாக முன்வரவேண்டும் என்பதே பாதிக்கப்பட்டவர்களின் எதிர்பார்ப்பாகும்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 52.09 அடி**

First Published : 24 Apr 2012 12:14:50 PM IST

ஈரோடு, ஏப்.23: பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை 52.09 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 330 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 750 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 4.95 டி.எம்.சி.

**திருவாரூரில் ஏப். 26-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

First Published : 24 Apr 2012 10:44:34 AM IST

திருவாரூர், ஏப். 23: திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் சி. நடராசன் தலைமையில் ஏப். 26-ம் தேதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் நடைபெறவுள்ளது.

இதில் முன்னோடி விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள், விவசாயம், தோட்டக் கலைத் துறை தொடர்பான குறைகளை தெரிவித்துப் பயன் பெறலாம் என மாவட்ட நிர்வாகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## தானிய உற்பத்தி 25.26 கோடி டன்னாக உயரும்

ஏப்ரல் 25,2012,00:52



புதுடில்லி:நடப்பு 2011-12ம் பயிர் பருவத்தில் (ஜூலை-ஜூன்), நாட்டின் உணவு தானியங்கள் உற்பத்தி சாதனை அளவாக, 25.26 கோடி டன்னாக அதிகரிக்கும் என, மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது, பிப்ரவரி மாதம் வெளியிடப்பட்ட இரண்டாவது மதிப்பீட்டில், 25.04 கோடி டன்னாக இருக்கும் என, தெரிவிக்கப்பட்டிருந்தது.

சென்ற 2010-11ம் பருவத்தில், உணவு தானியங்கள் உற்பத்தி, 24.48 கோடி டன்னாக இருந்தது. நாட்டின் நெல் உற்பத்தி, 10.34 கோடி டன்னாக உயரும் என, மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது, இதற்கு முந்தைய மதிப்பீட்டில், 10.27 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டிருந்தது. இதே போன்று, கோதுமை உற்பத்தியும், 8.83 கோடி டன்னிலிருந்து, 9.02 கோடி டன்னாக அதிகரிக்கும் என, மறு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இருப்பினும், இதர தானியங்கள் மற்றும் பருப்பு வகைகளின் உற்பத்தி முறையே, 4.19 கோடி டன் மற்றும் 1.70 கோடி டன்னாக குறையும் என, மறு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது, முந்தைய மதிப்பீட்டில், முறையே 4.21 மற்றும் 1.73 கோடி டன்னாக இருக்கும் என, தெரிவிக்கப்பட்டிருந்தது.மறுமதிப்பீட்டில், பருத்தி உற்பத்தி, 3.41 கோடி பொதிகளிலிருந்து (ஒரு பொதி=170 கிலோ), 3.52 கோடி பொதிகளாக உயரும் என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற 2010-11ம் பயிர் பருவத்தில், நெல் உற்பத்தி 9.60 கோடி டன்னாகவும், கோதுமை உற்பத்தி 8.69 கோடி டன்னாகவும் இருந்தது. மேலும், இதர தானியங்கள் உற்பத்தி 4.37 கோடி டன்னாகவும், பருப்பு வகைகள் உற்பத்தி 1.82 கோடி டன் என்ற அளவிலும் இருந்தது.

## பருத்தியில் நுனி கிள்ளுதல்

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 25,2012,00:00 IST

அதிக வெப்பத்தினால் பருத்திக்கு அதிகம் நீர் பாய்ச்சப்படுகிறது. மேலும் தழைச்சத்து அதிகம் உள்ள இடங்களிலோ அல்லது இட்ட இடங்களிலோ செடி வளர்ச்சி ஊக்குவிக்கப்பட்டு பூ, காய் மற்றும் சப்பைகள் கொட்ட ஆரம்பிக்கும். இதனைக் கட்டுப்படுத்த நுனிக்கிள்ளுதல் அவசியமாகும். பயிர் வளர்ச்சியில் காய்கள் அதிக பருமனாவதற்கும் நன்கு வெடிக்கவும் கையாள வேண்டிய சில எளிய தொழில்நுட்பங்களில் நுனி அரும்பு கிள்ளுதல் என்பது முக்கிய தொழில் நுட்பமாகும். தழைச்சத்து உரங்கள் அதிகமாக இடுவதால் பயிர்கள் சில சமயங்களில் தேவைக்கு அதிகமாக வளர்ந்து பூப்பிடித்தல் திறன் பாதிக்கப்பட்டு காய்கள் பிடிப்பது குறைந்துவிடும். இத்தகைய தருணங்களில் செடியில் வளரும் நுனிகளை கிள்ளிவிடுவதால் பக்க கிளைகள் உருவாகி பூக்களும் காய்களும் அதிக எண்ணிக்கையில் உண்டாகி தக்க காலத்தில் வெடிக்க உதவி செய்கிறது. சத்துப்பொருட்கள் விரயமாவதைத் தடுத்து பூ மற்றும் காய்களுக்கு ஊட்டமளிக்க உதவி செய்கின்றது.

நுனி கிள்ளும் பருவம்: ரகம்: 15 கணுக்களுக்கு மேல் (75-90ம் நாட்களில்), வீரிய ஒட்டு ரகம்: 20 கணுக்களுக்கு மேல் (90-100ம் நாட்களில்) நுனி கிள்ளியபின் நாப்தலின் அசிடிக் அமிலம் 40 பிபிஎம் (பிளானோபிக்ஸ்) பயிர் ஊக்கியை 4.0 மில்லி மருந்தை 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பதன் மூலம் செடி வளர்ச்சி தடுக்கப்பட்டு காய்கிளைகள் அதிகம் தோன்றும்.

**நன்மைகள்**: காய்கள் அதிகம் தோன்றுதல், செடியின் நுனிக்கிளைகளில் உள்ள காய்ப்புழுக்களின் முட்டைகள் அழிந்துவிடும்.

முனைவர் ஆர்.ஜெயராஜன் நெல்சன்,
பேராசிரியர் மற்றும் தலைவர்,
பருத்தி ஆராய்ச்சி நிலையம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்-626 125.

## ஆடுவளர்ப்பு - குடல்புழு நீக்க மருந்தாக சோற்றுக்கற்றாழை

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 25,2012,00:00 IST

வேளாண் அறிவியல் நிலையமானது மக்கள் பங்கேற்புடன் அவர்களின் தேவையினை அறிந்து குடல்புழு நீக்கத்திற்குப் பயன்படுத்தப் படும் பல்வேறு மருந்துகளின் செயல்பாட்டினைக் கண்டறிய தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி

மையத்துடன் இணைந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பரிசோதனையின் விவரம்:

* ஆல்பெண்டசோல் 7.5 மி.லி. கிராம்/கிலோ எடை

* வேப்பெண்ணெய் 50 மி.லி/ ஆடு

* வேப்பங்கொட்டை 20 கிராம், பாகற்காய் 20 கிராம், பூண்டு 50 கிராம், வாழைத்தண்டு 50 கிராம் ஆகியவற்றிலிருந்து சாறு எடுத்து (தேவையான தண்ணீர் கலந்து) வெல்லத்துடன் கலந்து கொடுத்தல்

* சோற்றுக்கற்றாழை ஒரு ஆட்டிற்கு 50-75 கிராம் அளவை 10 கிராம் வெல்லத்துடன் கலந்துகொடுத்தல்

ஒவ்வொரு பரிசோதனைக்கும் 10 ஆடுகள் வீதம் மொத்தம் 40 ஆடுகளை தேர்வுசெய்து மேற்கூறிய குடல்புழு நீக்க மருந்தினை பயன்படுத்தி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. குடல்புழு நீக்க மருந்து கொடுப்பதற்கு முன்னரும் ஒரு மாதத்திற்கு பின்னரும் ஆடுகளின் எடை கணக்கிடப்பட்டது. ரத்தப்பரிசோதனையும் செய்யப்பட்டது. ஒவ்வொரு பரிசோதனைக்குட்பட்ட ஆடுகளிலிருந்து சாணம் சேகரித்து குடல்புழு நீக்க மருந்து கொடுப்பதற்கு முன்னரும் மருத்து கொடுத்த பின் 7, 14, 28வது நாளில் சாணப்பரிசோதனை செய்யப்பட்டது.

பரவலாக்கம்: வேளாண் அறிவியல் நிலையமானது தூக்கநாயக்கன் பாளையம் வட்டாரத்திலுள்ள ஏலூர் கிராமத்தில் டிசம்பர் 2008ம் ஆண்டு இப்பரிசோதனையை மேற்கொண்டது. அதன்பின் தாளவடி மற்றும் அந்தியூர் வட்டாரங்களுக்கு இந்த தொழில்நுட்பம் பரவியது. இதனை உறுதிசெய்ய வேளாண் அறிவியல் நிலையம் பணிபுரியும் பகுதிகளிலிருந்து செம்மறி ஆடு வளர்ப்போரை தேர்வுசெய்து ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வின் முடிவு: சோற்றுக் கற்றாழை தொழில்நுட்பத்தை ஆடுவளர்ப்போர் பின்பற்ற ஆரம்பித்ததுடன் முறையாக எப்படி அளிக்க வேண்டும் என்பதை தெரிந்துகொண்டனர்.

Mதுாணுச்ஞீச் - வேளாண் அறிவியல் நிலையத்திலிருந்து நேரடியாகவும் நிலையத்தின்மூலம் பயிற்சி பெற்ற கால்நடை ஊக்குநர்கள், ஆடுவளர்ப்போர் மூலமாகவும் (சுய உதவிக்குழு கூட்டத்தில் விவாதித்தல் மூலம் மற்றும் நிலையத்தின் செய்திமலர் (உழவர் மலர்) மூலம்) பரவலாக்கம் செய்யப்பட்டது. கால்நடை ஊக்குநர்கள் ஆரம்பத்தில் அவர்களின் வருமானம் பாதிக்கப்படுவதால் இதனை பரிந்துரை செய்யவில்லை. பின்னர் சோற்றுக் கற்றாழை சிறந்த குடல்புழு நீக்க மருந்தாகவும் எளிதில் கிடைக்கக் கூடியதாகவும் இருப்பதை உணர்ந்துகொண்டு இத்தொழில் நுட்பத்தை அனைவருக்கும் பரிந்துரை செய்து வருகின்றனர்.

குடல்புழு நீக்க மருந்தாக சோற்றுக்கற்றாழையை பயன்படுத்தும் முறை:

* நன்கு வளர்ந்த ஆரோக்கியமான
சோற்றுக்கற்றாழைச் செடியை தேர்வு செய்ய வேண்டும்.

* சோற்றுக்கற்றாழையின் மடலை வெட்டியெடுத்து சுத்தமான தண்ணீர் கொண்டு கழுவ

வேண்டும். பின் மடலின் மேல்தோலையும் ஓரத்திலுள்ள முட்களையும் நீக்க வேண்டும்.
* சோற்றுப்பகுதியினை எடுத்து அதனுடன் நாட்டுச்சர்க்கரை கலக்க வேண்டும்.
* இந்தக் கலவையினை வாய் வழியாக ஆடுகளுக்கு 3 மாதங்களுக்கு ஒரு முறை மேய்ச்சலுக்கு செல்லும் முன்னர் கொடுக்க வேண்டும்.-ஆர்.ஜி.ரீஹானா,விலங்கியல்துறை நிபுணர், தாராபுரம். 98944 84806.

## நெற்பயிரில் வேதியியல் சாரா பூச்சிக்கட்டுப்பாடு முறைகள்

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 25,2012,00:00 IST

*** விளக்குப்பொறி:** பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும், தாய் அந்துப்பூச்சிகளை கவர்ந்திழுக்கவும் விளக்குப் பொறிகளைப் பயன்புடுத்தலாம். தேவையில்லாத பொருட்களை வயலில் ஒரு ஓரமாகக் குவித்து மாலை வேளைகளில் தீ மூட்டி விளக்குப் பொறியாகப் பயன்படுத்தலாம். மேலும் அரிக்கேன் விளக்கு மற்றும் மின்சார விளக்குகளையும் பொறியாகப் பயன்படுத்தலாம். இந்தப் பொறிகளை மாலை ஐந்தரை மணிக்கு மேல் வயலில் வைக்க வேண்டும். தாய் அந்துப் பூச்சிகள் விளக்கின் வெளிச்சத்தினால் கவரப்படும். இந்த முறையில் தாய்ப்பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். விளக்குப் பொறிகளின் அருகில் ஒரு பெரிய தட்டு அல்லது பாத்திரத்தில் கொஞ்சம் மண்ணெண்ணெய் கலந்த தண்ணீர் வைக்க வேண்டும்.
*** மஞ்சள் ஒட்டுப்பொறி**: மஞ்சள் இரும்புத்தகடு அல்லது மஞ்சள் டப்பாக்களில் ஆமணக்கு எண்ணெயை தடவி வயலில் வைக்க வேண்டும். இந்த நிறத்தினால் கவரப்படும் வெள்ளை ஈக்கள் மற்றும் தத்துப்பூச்சிகள் அந்தப் பொறிகளில் ஒட்டிக் கொள்ளும். ஒவ்வொரு நாளும் ஒட்டிக்கொள்ளும் பூச்சிகளை துடைத்து எடுத்துவிட்டு மீண்டும் எண்ணெய் தடவவேண்டும்.
*** பறவை தாங்கி (பறவை ஆசனம்):** நீளமான காய்ந்த குச்சிகளைக் கொண்டு "டி' வடிவ பறவை தாங்கிகளை (ஒரு ஏக்கருக்கு 15-20) வயலில் வைக்க வேண்டும். இவற்றில் பறவைகள், ஆந்தைகள் வந்து உட்கார வசதியாக இருக்கும். இவற்றில் உட்காரும் பறவைகள் வயலில் காணப்படும் புழுக்கள் மற்றும் எலிகளை உண்டு அவற்றைக் கட்டுப்படுத்தும்.
*** கையால் சேகரித்து அழித்தல்:** சாகுபடி பரப்பரளவு குறைவாக இருக்கும்பொழுது இந்த முறையைப் பயன்படுத்தலாம். பாலிதீன் பைகளில் தண்ணீருடன் சிறிதளவு மண்ணெண்ணெய் ஊற்றி வைத்துக்கொள்ள வேண்டும். மாலை நேரங்களில் வயல்களில் காணப்படும் புழுக்கள் மற்றும் முட்டைக்குவியல்களைச் சேகரித்து மண்ணெண்ணெய் சேர்க்கப்பட்ட இந்தப் பைகளில் போட்டு அழிக்கலாம். பூச்சித் தாக்குதல் குறைவாக இருக்கும்பொழுதே இந்த முறையைப் பயன்படுத்த வேண்டும். **தொடர்புக்கு:** கோ.பி.வனிதா, வேளாண்மைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சிநிலையம், மதுரை-625 104. போன்: 04522-422
955.முனைவர்.கோ.பி.வனிதா,வேளாண்மைக்கல்லூரி

மற்றும் ஆராய்ச்சிநிலையம்,முனைவர்.ரா.கோபாலகிருஷ்ணன், ரோவர் வேளாண்மைக்கல்லூரி, பெரம்பலூர்-625 212.

## சின்னச்சின்ன செய்திகள்

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 25,2012,00:00 IST

**நெருப்புக்கோழி**: பறக்காத பறவைகளில் நெருப்புக்கோழி, ஈமு கோழி, ரியா பறவை, கேசாவாரி பறவை, கிவி பறவை ஆகியவை அடங்கும். இவைகளில் மிகச்சிறிய பறவை நெருப்புக்கோழி. பின்னோக்கிச் சென்று பறக்கும் மிகச்சிறிய ஹம்மிங் பறவை முதல் 120 கிலோவிற்கும் மேலாக எடை கொண்ட நெருப்புக்கோழி வரை ஒவ்வொரு பறவையும் வினோத பறவைதான்.
உலகில் சற்றொப்ப 20 லட்சம் நெருப்புக்கோழிகள் உள்ளது. வியாபார ரீதியில் 50க்கும் மேற்பட்ட நாடுகளில் வளர்க்கப் படுகிறது. இதன் கால்களம் கழுத்தும் நீளமானதாக இருக்கும். ஆண் பறவை 7 அடி உயரமும் பெண்பறவை 6 அடி உயரமும் இருக்கும். 70 ஆண்டுகள் வரை உயிர்வாழும். இதன் வலிமையான காலில் 2 விரல்கள் முன்னோக்கி இருக்கும். உள்நோக்கிய பெரிய விரலில்2 அங்குல நீளத்திற்கு கூர்மையான நகம் உண்டு. மணிக்கு 75 கிலோமீட்டர் வேகத்தில் ஓடக்கூடியது. 30 நிமிடம் அதே வேகத்தில் ஓடும் திறன் கொண்டது. பற்கள் இல்லாததால் தீவனத்தை முழுவதுமாக உண்ணும். சிறிய கூழாங்கற்களையும் விழுங்கி வயிற்றில் வைத்துக்கொள்ளும். தீவனத்தை அரைக்க இது உதவுவதோடு ஓடும்போது உடலை தேவையான திசையில் திருப்பிக் கொள்வதற்கும் உதவுகிறது.
வருடத்திற்கு சுமார் 40 முட்டைகள் இடும். முட்டை எடை சுமார் 1200 கிராம் முதல் 1500 கிராம் வரை இருக்கும். முட்டை பொரிக்கும் காலம் 42 நாட்கள். ஒரு பொதுவான முட்டைக்குழியில் முட்டைகளை இட்டு அடைகாக்கும். பகலில் பெட்டையும் இரவில் ஆண் நெருப்புக்கோழியும் முட்டையை அடைகாக்கும். தாவரங்கள், சிறு மரங்களின் வேர்கள், விதைகள், பூச்சிகள், பல்லிகள் போன்றவற்றை உண்ணும்.
தமிழகத்தில் சென்னை அருகில் காட்டுப்பாக்கத்தில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கால்நடை ஆராய்ச்சி மையத்தில் நெருப்புக்கோழிகள் வளர்க்கப் படுகின்றன. நெருப்புக்கோழி இறைச்சியில் கொழுப்புச்சத்து, கொலஸ்ட்ரால் மற்றும் எரிசக்தியின் அளவு மிகவும் குறைவாக உள்ளது. நெருப்புக்கோழி சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் நேசப் பறவையாகக் கருதப்படுகிறது. சில உயிரியல் பூங்காக்களில் நெருப்புக்கோழியின் முதுகில் அமர்ந்து சவாரிசெய்ய ஏற்பாடு செய்யப்படுகிறது. (தகவல்: தா.லூர்து நித்தா, ம.பாபு, பி.என்.ரிச்சர்டு ஜெகதீசன், கால்நடைப் பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி மையம், புதுக்கோட்டை, கால்நடை பல்கலைக்கழகம் மற்றும் ஆராய்ச்சி மையம், திருச்சி)

அறுவடைக்குப்பின் சரியான தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி வாழையின் வாழ்நாளை அதிகரித்து நீண்டதூரத்திற்கு எடுத்துச் செல்லமுடியும். ஏற்றுமதி செய்யும்போது பழங்களுக்கு சேதம் விளைவிக்கா வண்ணம் மேடு பள்ளங்கள் கொண்டு தயாரிக்கப்பட்ட அட்டைப் பெட்டிகளில் அடைத்து அனுப்ப வேண்டும். இந்தப் பெட்டிகள்
57 x 30 x 22.5 செ.மீ. அளவு
உடையது. இதில் 1.3 செ.மீ. விட்டமுடைய 10 சிறு குழிகள் இருக்கும். இதில் வாழைச் சீப்புகளை அதன் அடிப்பாகம் கீழிருக்குமாறும் காய்கள் மேல்நோக்கி இருக்குமாறும் நீளவாக்கில் அடுக்க வேண்டும். இவற்றை புகைவண்டியில் அனுப்பும்போது ஒன்றன்மேல் ஒன்றாக பெட்டிகள் இருக்குமாறு அடுக்க வேண்டும். 10 டன் கொள்ளளவுள்ள பெட்டியில் 100 வாழைப் பெட்டிகளை 350 வரை அடுக்க முடியும்.
வாழைப்பழங்களை 13 டிகிரி செல்சியசுக்கு கீழ் உள்ள வெப்பநிலையில் வைத்து சேமிக்கும் போது அவற்றின் தோலில் கறுப்புநிற புள்ளிகள் தோன்றும். இக்குறைபாடுடைய பழங்கள் பழுத்தபின் அதன் தோல் கடினமாக இருக்கும். மேலும் இப்பழங்கள் எளிதில் பூஞ்சான நோய் தாக்குதலுக்கு ஆளாகின்றன. எனவே இந்த வெப்பநிலை பழங்கள் சேமிக்க உகந்ததல்ல. ரொபஸ்டா மற்றும் குள்ள வாழைத்தாரின் முக்கால் பாகம் விளைச்சலின்போது (பூத்த 100 நாட்களுக்குப் பின்) வெட்டி முன் சேமிப்பு நேர்த்திக்காக 1000 பி.பி.எம். தலோபெண்டசோல் என்ற மருந்தில் தாரிலிருந்து எடுக்கப்பட்ட சீப்புகளை நனைத்து சேமிக்க வேண்டும். அவ்வாறு சேமிக்கும்போது தார்கள் அதிகபட்சமாக 28 நாட்கள் 13 - 15டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் எந்தவித சேதம் இல்லாமல் சேமிக்க முடியும். 13லிருந்து 15 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையும் 80-90 சதம் காற்றின் ஈரப்பதமும் பழங்களை சேமிப்பதற்கு ஏற்ற சூழ்நிலையாகும். வெப்பநிலை அதிகரிப்பதால் பழங்கள் விரைந்து பழுத்துவிடுகின்றன. (**தகவல்**: த.நா.பாலமோகன், ஜெ.அக்னிலியா, தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர்)-டாக்டர்கு.சௌந்தரபாண்டியன்

## பூண்டு விலை சரிந்ததால் "கூவி கூவி' விற்பனை

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 25,2012,04:38 IST

தியாகதுருகம்: பூண்டு விளைச்சல் அதிகரித்தால் தியாகதுருகம் பகுதியில் ஒரு கிலோ 25 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.
சமையலுக்கு பூண்டு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. சைவ சமயலுக்கு மட்டுமின்றி அசைவ சமையலுக்கும் அதிகம் பயன்படுத்துகிறோம். இந்த பூண்டு தற்போது விளைச்சல்

அதிகரித்துள்ளதால் விலை குறைந்துள்ளது.

ஒரு கிலோ 200 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்ட பூண்டு விலை தற்போது கிலோ 25 ரூபாய்க்கு தியாகதுருகம் பகுதியில் கூவி கூவி விற்பனை செய்யப்பட்டது.

சற்று தரம் குறைந்த சிறிய அளவில் இருந்த பூண்டுகள் ஒரு கிலோ
15 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

தியாகதுருகம் வாரச்சந்தையில் விலை மலிவாக கிடைத்த பூண்டை மக்கள் பலரும் ஆர்வமுடன் வாங்கி சென்றனர்.

வியாபாரிகள் சிலர் மினி டெம்போவில் நேரடியாகவே கிராமங்களுக்கு எடுத்து சென்றும் விற்பனை செய்தனர்.

பல நாட்களுக்கு
கெடாமல் இருக்கும் என்பதால் இருப்பு வைத்திருந்து சமையலுக்கு பயன்படுத்தலாம் என்பதால் அடிக்கடி அசைவ சமையல் செய்பவர்கள் அதிக அளவில் பூண்டை ஆர்வமுடன் வாங்கி சென்றனர்.

**வேளாண் அலுவலர் தகவல்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 25,2012,04:37 IST

கருத்தை பதிவு செய்ய

கள்ளக்குறிச்சி: விளை பொருட்களின் தற்போதைய மார்க்கெட் விலை நிலவரத்தை விவசாயிகள் எஸ்.எம்.எஸ்., மூலம் அறியலாம் என வேளாண் அலுவலர் நபீஷாபானு தெரிவித்தார்.

கள்ளக்குறிச்சி அடுத்த இந்திலியில் வேளாண் துறை சார்பில் உழவர் பெருவிழா நடந்தது.

இந்திலி முருகன் கோவில் வளாகத்தில் நடந்த விழாவிற்கு வேளாண் அலுவலர் பொன்னுராசன் தலைமை தாங்கினார்.

ஒன்றிய சேர்மன் ராஜசேகர் முன்னிலை வகித்தார். துணை சேர்மன் கண்ணன், மாவட்ட கவுன்சிலர் மணி சிறப்புரையாற்றினர். வேளாண் உதவி அலுவலர் முருகேசன் வரவேற்றார்.

விவசாயிகளின் மொபைல்போன்களை பதிவு செய்து அதன் மூலம் விளை பொருட்களின் தற்போதைய மார்க்கெட் விலை குறித்து எஸ்.எம்.எஸ்., மூலம் தகவல் பெறும் திட்டம் பற்றி வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை அலுவலர் நபீஷாபானு விளக்கினார்.

இதனால் விலை ஏற்ற இறக்கம் உணர்ந்து தங்களின் விளை பொருட்களை அதிக லாபத்திற்கு விற்க முடியும் என்றும் தெரிவித்தார்.விழாவில் வருவாய் அதிகாரி நளினி, வி.ஏ.ஓ., இளங்கோவன், வேளாண் உதவி அலுவலர்கள், தோட்டக்கலை மற்றும் மண்வளக் கலைத்துறை

அதிகாரிகள் கலந்து கொண்டனர். பின்னர் விவசாயிகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.ஊராட்சி மன்ற தலைவர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.

**பயனற்று கிடக்கும் மக்காச்சோளம் பிரித்தெடுப்பு இயந்திரம்: மண்ணோடு மண்ணாக மக்கும் அவலம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 25,2012,04:37 IST

கருத்தை பதிவு செய்ய

கள்ளக்குறிச்சி: விவசாயிகள் நலனுக்காக அரசு வழங்கிய மக்காச்சோளம் பிரித்தெடுப்பு இயந்திரம் பயன்படுத்தப்படாமல் கள்ளக்குறிச்சி, சின்னசேலம் ஒழுங்கு முறை விற்பனை கூடங்களில் மண்ணோடு மண்ணாக மக்கி வருகிறது.

கள்ளக்குறிச்சி பகுதிகளில் பொட்டியம், மண்மலை, மாத்தூர், கோட்டக்கரை, அம்மையகரம், விளம்பார் உள்ளிட்ட பல பகுதிகளில் மக்காசோளம் அதிகளவில் பயிர் செய்யபடுகிறது. மக்காசோளம் அறுவடை தருணங்களில் கள்ளக்குறிச்சி, சின்னசேலம் ஒழுங்கு முறை கூடத்திற்கு ஆயிரக்கணக்கான மூட்டைகள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இதனால் விவசாயிகள் நலன் கருதி 83 ஆயிரம் ரூபாய் மதிப்பில் தலா இரண்டு மக்காசோளம் பிரித்தெடுக்கும் இயந்திரம் என கள்ளக்குறிச்சி, சின்னசேலம் ஒழுங்கு முறை விற்பனை கூடங்களுக்கு அரசு வழங்கியது. ஒரு மணி நேரத்திற்கு 96 ரூபாய் என குறைந்த வாடகைக்கு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்தது. மக்காச்சோளம் பிரித்தெடுக்கும் இயந்திரம் மட்டுமே வாடகைக்கு விடப்படுவதால் டிராக்டர் வைத்திருக்கும் விவசாயிகள் மட்டுமே இந்த இயந்திரத்தை பயன்படுத்த முடியும். மக்காசோளம் பிரித்தெடுக்கும் இயந்திரத்தை 96 ரூபாய்க்கு வாடகைக்கு எடுத்து சென்றாலும், பயன்படுத்துவதற்கு டிராக்டர் இன்ஜின், டீசல் போன்றவற்றிற்கு செலவினங்கள் ஏற்படுகின்றது. இதனால் அதிகளவில் செலவு ஏற்படுவதாக கருதி ஒழுங்கு முறை விற்பனை கூடங்களில் உள்ள மக்காசோளம் பிரித்தெடுக்கும் இயந்திரத்தை வாடகைக்கு எடுத்து செல்வதற்கு விவசாயிகள் முன்வரவில்லை.

தனியாரிடம் வாடகைக்கு எடுக்கும்போது டிராக்டருடன் சேர்ந்து இன்ஜினை எடுத்துவந்து விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர். அதற்கு வாடகையாக ஒரு மூட்டைக்கு 40 ரூபாய் வீதம் கொடுக்கின்றனர். ஆனால் அரசு இயந்திரத்தை கொண்டுவந்தல் டிராக்டர் வாடகை, டீசல் என தனியாரை விட கூடுதல் செலவு ஏற்படுவதால் அரசு மக்காச்சோள இயத்திரத்தை பயன்படுத்த விவசாயிகள் முன்வருவதில்லை.

கள்ளக்குறிச்சி, சின்னசேலம் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் உள்ள மக்காசோளம் பிரித்தெடுக்கும் இயந்திரங்களை ஒரு சில நாட்கள் மட்டுமே விவசாயிகள் வாடகைக்கு எடுத்து

சென்றுள்ளனர். அதன் பின் இந்த இயந்தரத்தை எடுத்து செல்வதற்கு விவசாயிகள் யாரும் முன்வரவில்லை. அதனால் ஒழுங்கு முறை விற்பனை கூடங்களில் ஆண்டுக்கணக்கில் ஒரே இடத்தில் நிறுத்தப்பட்டுள்ள இயந்திரங்கள் மண்ணோடு மண்ணாக மக்கி
வருகிறது.
எனவே ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் பயனற்று கிடக்கும் மக்காசோளம் இயந்திரத்தை விவசாயிகள் பயன்படுத்துவற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## பலாப்பழம் விளைச்சல் அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 25,2012,03:25 IST

பெத்தநாயக்கன்பாளையம்:பெத்தநாயக்கன்பாளையம் அருகே உள்ள பெரிய, சின்ன கல்வராயன் மலை பகுதிகளில், பலாப்பழம் அதிகளவில் விளைந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.சேலம் மாவட்டம், ஆத்தூர் அருகே உள்ள பெரிய கல்வராயன், சின்ன கல்வராயன் மலைக் கிராமங்கள் உள்ளன. அதில், வடக்கு நாடு, தெற்கு நாடு, கீழ்நாடு, கருமந்துறை, சூலாங்குறிச்சி, கரியக்கோவில், தும்பல் போன்ற மலை கிராமங்களில், மா, பலா, மிளகு, முந்திரி உள்ளிட்ட பயிர்களை, விவசாயிகள் பயிர் செய்து வருகின்றனர்.கடந்த ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதத்தில், மேற்குறிப்பிட்ட மலை கிராமங்களில், பருவ மழை பெய்ததால், நீரோடை, ஆறு, விவசாய கிணறு போன்ற நீர் நிலைகளில் நீர்மட்டம் உயர்ந்தது.

அதனால், விவசாயம் நல்ல முறையில் நடந்து வந்தது.அதன்படி, கல்வராயன் மலையில் பயிர் செய்துள்ள பலா மரங்களில், கொத்துக், கொத்தாக பலாக் காய்கள் பிடித்துள்ளது. பலாப்பழம், 150 முதல் 500 ரூபாய் வரை விற்கப்படுகிறது. விளைச்சல் அதிகரித்தும், விலை உயர்ந்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.விளைந்த பலாப்பழத்தை, மார்ச், ஏப்ரல், மே மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை அறுவடை செய்யப்படும். இதில், கேரளா, பண்ருட்டி, ஆத்தூர் கல்வராயன், நாமக்கல் கொல்லிமலை பகுதிகளில் விளையும் பலா பழங்கள், சேலம், நாமக்கல், விழுப்புரம், பெரம்பலூர் உள்ளிட்ட மாவட்டங்களுக்கு விற்பனைக்கு
அனுப்பப்படுகிறது.இதுகுறித்து கருமந்துறையை சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது:அறுவடை காலத்தில், பண்ருட்டி, கேரளா பலாப் பழங்கள் அதிகளவில் விற்பனைக்கு வரும். கல்வராயன் மலையில் விளையும் பழங்கள் சுவை மிகுந்திருப்பதால் மக்கள் அதிகளவில் வாங்கிச் செல்வர். மரத்துக்கு, 100 முதல், 150 காய்கள் வரை பிடித்துள்ளது. பலாப்பழம் சீஸன், ஓரிரு வாரங்களில் சூடுபிடிக்கும்.இவ்வாறு கூறினர்.

## உணவு உற்பத்தியை பெருக்க விவசாயிகளுக்கு அறிவுரை

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 25,2012,04:28 IST

கருத்தை பதிவு செய்ய

தர்மபுரி: "'உழவர் விழாவை பயன்படுத்தி, விவசாயிகள் உணவு உற்பத்தியை பெருக்கி கூடுதல் வருமானம் ஈட்ட வேண்டும்," என கலெக்டர் லில்லி தெரிவித்தார்.

தர்மபுரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் லில்லி தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது.கூட்டத்தில் பொதுமக்களிடம் இருந்து, 298 கோரிக்கை மனுக்களை கலெக்டர் பெற்றார். வேளாண் கடன், தாட்கோ கடன், முதலமைச்சரின் சிறப்பு திட்டங்கள், பட்டா, புதிய ரேஷன்கார்டு, சாலை, மின்சார வசதி, தெருவிளக்குகள், முதியோர் ஒய்வூதியம் மற்றும் திருமண உதவித்தொகை ஆகியவற்றை வலியுறுத்தி பொதுமக்கள் மனு அளித்தனர். மனுக்களை விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க கலெக்டர் உரிய அதிகாரிகளிடம் வழங்கி உத்தரவிட்டார்.கூட்டத்தில் பட்டு வளர்ச்சி துறை மூலம், 32 பயனாளிகளுக்கு பட்டு(மல்பரி) நடவு மானியமாக, ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் உதவித்தொகைகளை வழங்கி கலெக்டர் லில்லி பேசினார்.அப்போது அவர் பேசியதாவது:தர்மபுரி மாவட்டத்தில், 472 வருவாய் கிராமங்களில் உழவர்பெருவிழா அடுத்த மாதம் 17ம் தேதி கொண்டாடப்படுகிறது. அனைத்து வேளாண்மை துறை மூலம் செயல்படுத்தப்படும் புதிய தொழில்நுட்பங்கள், ஊட்டச்சத்து நிர்வாகம், மதிப்பு கூட்டு தொழில்நுட்பம், காய்கறி தோட்டம் அமைப்பது, பட்டுப்புழு வளர்ப்பது குறித்தும், நவீன கருவிகள் செயல்பாடுகள், நவீன கருவிகள் பயன்பாடு ஆகியவை குறித்தும் கண்காட்சிகள், படக்காட்சிகள் மற்றும் மாதிரிகள் மூலம் இந்த உழவர்பெருவிழாவில் விவசாயிகளுக்கு விளக்கப்படுகிறது.

கூட்டுறவு சங்கங்கள் மற்றும் வங்கிகள் மூலம் கடன்கள், வேளாண் அட்டைகள் வழங்கப்படுகிறது. மாலை நேரத்தில் தெருக்கூத்து, நாடகங்கள் போன்ற பல்சுவை நிகழ்ச்சிகள் விவசாய திட்டங்கள் குறித்து எளிய முறையில் விளக்கப்படுகிறது. கால்நடை துறையின் மூலம் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடக்கிறது. இந்த உழவர் விழாவை பயன்படுத்தி விவசாயிகள் உணவு உற்பத்தியை பெருக்கி கூடுதல் வருமானம் ஈட்ட வேண்டும்.இங்கு பெறப்பட்டுள்ள மனுக்களின் மீது சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்கள் உரிய நடவடிக்கை எடுத்து அதன் விவரங்களை அடுத்த வாரம் நடக்கும் மக்கள் குறை தீர்க்கும் கூட்டத்தில் தெரிவிக்க வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார். துணை கலெக்டர் செல்வராஜன், தனி துணை கலெக்டர் பாலசுப்பிரமணியன், ஆதிதிராவிடர் நல அலுவலர் கிரிஜாதேவி, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் கக்கன், வசந்தி, பட்டு வளர்ச்சி உதவி இயக்குனர் ஜெயக்குமார் மற்றும் தாசில்தார்கள், அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## வடதொரசலூரில் வேளாண் விழிப்புணர்வு கலைநிகழ்ச்சி

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 25,2012,04:37 IST

கருத்தை பதிவு செய்ய

தியாகதுருகம்: தியாகதுருகம் ஒன்றியம் வட தொரசலூரில் உழவர் பெருவிழா நடந்தது. ஒன்றிய சேர்மன் பச்சை யம்மாள் வைத்தியலிங்கம் தலைமை தாங் கினார். மாவட்ட கவுன்சிலர்கள் அய்யப்பா, ராமன், ஊராட்சி மன்ற தலைவர் இதயகண்ணன் முன் னிலை வகித்தனர். வேளாண் உதவி இயக் குனர் ராமச்சந்திரன் வரவேற்றார்.

கிராமிய தெம்மாங்கு குழு சார்பில் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடந்தது. வேளாண்துறை அதிகாரிகள் தண்டபாணி, கார்த்திகேயன் முன் னாள் ஊராட்சி மன்ற தலைவர் சுப்புமகாலிங்கம், ஜான்பாஷா, கிருஷ்ணமூர்த்தி, பெரியசாமி கலந்து கொண்டனர். விழாவில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

## "விவசாய நிலங்களில் மண் பரிசோதனை அவசியம்'

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 25,2012,03:31 IST

குன்னூர்: "விவசாய நிலங்களில் மண் பரிசோதனை செய்து, அதற்கேற்ப சாகுபடி செய்ய வேண்டும்,' என பசுமை புரட்சி திட்ட விழாவில் வலியுறுத்தப்பட்டது.

மாநில அரசின் இரண்டாம் பசுமை புரட்சி திட்டம், குன்னூர் வட்டாரத்தில் உள்ள பல கிராமங்களில் நடந்தது.

விழாவில், குன்னூர் தோட்டக்கலை உதவி இயக்குனர் ஷிபிலா மேரி பேசுகையில், ""விவசாய நிலங்களில் அதிகரித்து வரும் ரசாயன உர பயன்பாட்டை குறைக்க வேண்டும்; மண் பரிசோதனை செய்து அதற்கேற்ப சாகுபடி செய்ய வேண்டும். ஒரு பயிரை மாறி, மாறி பயிரிடுவதன் மூலம் மண் வளம் பாதிக்கும்; எனவே, சுழற்சி முறையில் பயிர்களை சாகுபடி செய்ய வேண்டும்,'' என்றார். குன்னூர் உலிக்கலில் ஊர் தலைவர் சேதுராமன்; இளித்தொரையில் ஊர் தலைவர் தர்மராஜன்; எடப்பள்ளி ஊராட்சியில் தலைவர் கோபால்ராஜ்;பர்லியாரில் ஊராட்சி தலைவர் கலைச்செல்வன்;குன்னூர் ஊராட்சியில் கவுன்சிலர் ஹேம்சந்த்;ஜெகதளாவில் ஊர் துணைத் தலைவர் பீமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண் வணிக துறை அலுவலர் லாவண்யா உட்பட விவசாய துறை சார்ந்த அதிகாரிகள் பேசினர்.

## கடந்த நிதி ஆண்டில் பழங்கள், காய்கறி உற்பத்தி 3% உயர்வு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு,புதுடெல்லி

கடந்த 2011–12–ஆம் நிதி ஆண்டில் பழங்கள், காய்கறிகளின் உற்பத்தி 3 சதவீதம் உயர்ந்துள்ளதாக மத்திய விவசாய துறை ராஜாங்க அமைச்சர் ஹரிஷ் ரவாத் பாராளுமன்றத்திற்கு அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.

பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் உள்ள இந்தியா, கடந்த 2011–12–ஆம் நிதி ஆண்டில், அளவின் அடிப்படையில் முறையே 775.25 லட்சம் டன் பழங்கள் மற்றும் 1,496.07 லட்சம் டன் காய்கறிகளை உற்பத்தி செய்துள்ளது.

முந்தைய 2010–11–ஆம் நிதி ஆண்டில் பழங்கள் மற்றும் காய்கறி உற்பத்தி 748.78 லட்சம் டன் மற்றும் 1,465.54 லட்சம் டன்னாக இருந்தது.

இந்நிலையில், பழங்கள் மற்றும் காய்கறிகள் ஏற்றுமதி, 2011–12–ஆம் நிதி ஆண்டில் சற்றே அதிகரித்துள்ளது. கடந்த 2010–ஆம் ஆண்டில் வெங்காயத்திற்கு ஏற்பட்ட தட்டுப்பாடு காரணமாக அதன் விலை கிலோவுக்கு ரூ.85 வரை உயர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## எதிர்வரும் 2012–13 பருவத்தில் 30 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்ய முடியும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

எதிர்வரும் 2012–13 பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) ஒட்டுமொத்த அளவில் 30 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்ய முடியும் என சர்க்கரை ஆலைகளின் தேசிய கூட்டுறவு கூட்டமைப்பின் நிர்வாக இயக்குனர் வினய் குமார் தெரிவித்தார்.

இந்தியா–பிரேசில்

சர்வதேச அளவில் சர்க்கரை உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்திலும், பிரேசில் முதலிடத்திலும் உள்ளன. எனினும் சர்க்கரை பயன்பாட்டில் இந்தியாதான் முதலிடத்தில் இருந்து வருகிறது. உள்நாட்டில் சர்க்கரை உற்பத்தி குறித்த மதிப்பீடுகள் அவ்வப்போது மாற்றம் கண்டு வருகின்றன. மத்திய வேளாண் அமைச்சகம் முதலில் உற்பத்தி 2.51 கோடி டன்னிலிருந்து 2.52 கோடி டன்னாக இருக்கும் என தெரிவித்தது. பின்னர் இது 2.50 கோடி டன்னிலிருந்து 2.55 கோடி டன் வரை இருக்கும் என மறுமதிப்பீடு செய்யப்பட்டது. எனினும் சர்க்கரை ஆலைகள் பொதுவாக நடப்பு பருவ உற்பத்தி 2.50 கோடி டன்னாக இருக்கும் என்றே எதிர்பார்க்கின்றன. கரும்பு சாகுபடி பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. எனவே சர்க்கரை உற்பத்தியும் கணிசமாக அதிகரிக்கும் நிலை உருவாகியுள்ளது. இதனால் சர்க்கரை ஏற்றுமதி அளவை அதிகரிப்பதற்கான வாய்ப்புகளும் அதிகரித்து வருகின்றன.

இந்தியாவில் ஆண்டு சர்க்கரை நுகர்வு 2.20 கோடி டன் என்ற அளவில் உள்ளது. எனவே உற்பத்தி 2.50 கோடி டன்னை எட்டும் பட்சத்தில் 30 லட்சம் டன் சர்க்கரை உபரியாக இருக்கும். இந்த சர்க்கரையை சர்வதேச சந்தையில் விற்பனை செய்ய முடியும். நடப்பு பருவத்தில் இதுவரை ஏற்கனவே 20 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்யப்பட்டு விட்டது. இனி வரும் மாதங்களில் இன்னும் பத்து லட்சம் டன் தாராளமாக ஏற்றுமதி செய்ய இயலும் என்றாலும் மத்திய அரசு இது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை.

வறட்சி

*2009–ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடுமையான வறட்சிக்குப் பிறகு 25 லட்சம் டன் சர்க்கரையை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை உருவானது. இதனால் சர்வதேச சந்தையில் சர்க்கரை விலை உயர்ந்தது. 2010–ஆம் ஆண்டில் நம் நாடு மீண்டும் சர்க்கரை ஏற்றுமதியை தொடங்கியது. கடந்த வாரத்தில் உலக சந்தையில் சர்க்கரை விலை முந்தைய 11 மாதங்களில் இல்லாத அளவிற்கு சரிவடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.*